உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திருமதி. வா. தீபா, எம்.எல்.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை
**அமர்வு வழக்கு எண்.** 33/2025
C.N.R. No.TNDG03–000691–2025
(முதல்நிலை விசாரணை வழக்கு எண். 74/2022)

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய
குற்ற எண்.170/2022 ………… குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1) மாதவன், வயது 26/2022
த/பெ. மாரியப்பன்,
ஜம்புளியம்பட்டி, பாலகிருஷ்ணாபுரம் அஞ்சல்,
திண்டுக்கல்.

2) விக்னு (எ) விக்னேஷ், வயது 28/2022
த/பெ. இருளப்பன்,
மொட்டணம்பட்டி ரோடு,
மேட்டுப்பட்டி, திண்டுக்கல்.

3) கார்த்திகேயன்,வயது 26/2022
த/பெ. மாணிக்கவாசகம்,
ஆத்துப்பட்டி, தோட்டனூத்து அஞ்சல்,
திண்டுக்கல்.

4) முகேஷ்குமார், வயது 22/2022
த/பெ. சக்திவேல்,
கிழக்கு மீனாட்சிநாயக்கன்பட்டி,
குரும்பபட்டி அஞ்சல், திண்டுக்கல்.

5) விஸ்வா, வயது 21/2022
த/பெ. லேட் தெய்வேந்திரன்
உலைப்பள்ளி நகர், திண்டுக்கல்.

6) பரத், வயது 24/2022
த/பெ. கிருஷ்ணசாமி,
கிழக்கு மீனாட்சி நாயக்கன்பட்டி
குரும்பபட்டி அஞ்சல், திண்டுக்கல்.

7) பிரவீன்குமார், வயது 20/2022
த/பெ. மாரியப்பன்,
அன்னை நகர், வேடபட்டி,
திண்டுக்கல். ........ எதிரிகள்.

எதிரிகள் மீதான குற்றம் : இவ்வழக்கின் புகார்தாரர் பூங்கொடியும் அவரது கணவர் செந்தில் குமார் (எ) ஓடைக்குமாரும் திண்டுக்கல் மேட்டுப்பட்டி ராமர்பிள்ளை தோப்பில் வசித்து சாலையோரம் காய்கறி வியாபாரம் செய்து வருகிறார்கள். கடந்த 25.07.2022ம் தேதி மாலை சுமார் 4 ¼ மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரரின் கணவர் செந்தில் குமார் (எ) ஓடைக்குமார் ராமர்பிள்ளை தோப்பு அருகில் உள்ள அவரது வீட்டின் முன்பு இருந்த போது அவருக்குத் தெரிந்த ஆஜர் 1 முதல் 7 எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் ராமர்பிள்ளை தோப்பு வந்தவர்கள் புகார்தாரரின் வீட்டின் முன்பு உட்கார்ந்து இருந்த புகார்தாரரின் கணவர் செந்தில்குமார் @ ஓடைக்குமாரை பார்த்து மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி இறங்கி வந்து அவரிடம் அழகர் எங்கே என கேட்டுள்ளார்கள். புகார்தாரரின் கணவர் எதற்கு அழகரை என்னிடம் கேட்கிறீர்கள் என சொல்லியுள்ளார். அதற்கு எதிரிகள் எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பியுள்ளான். அவனை போட்டுத் தள்ள வேண்டும் என சொல்லியுள்ளார்கள். அதற்கு புகார்தாரரின் கணவர் எங்க ஏரியாவிலேயே வந்து எங்க ஆளை கேட்கிறீர்களா இந்த விபரத்தை அழகரிடம் சொல்கிறேன் பார் என்று சொல்லவே 1– வது எதிரி டே இவனை இழுத்து வாங்கடா என சொன்னவுடன், உடன் வந்த 5,6,7 எதிரிகள் புகார்தாரரின் கணவரை பிடித்து சிறிது தூரம் இழுத்து வந்துள்ளார்கள். 1–வது எதிரி கொலை செய்யும் நோக்குடன் மறைத்து வைத்திருந்த

கத்தியை எடுத்து புகார்தாரரின் கணவர் செந்தில்குமார் என்ற ஓடைக்குமாரின் மூக்கில் வெட்டியும், அதே சமயம் 2வது எதிரி அருவாளால் தலையை நோக்கி வெட்டிய போது செந்தில் குமார் @ ஓடைக்குமார் வலது கையால் தடுக்கவே வலது கை மணிக்கட்டில் வெட்டு காயமும், பின் மீண்டும் தலையில் வெட்டிய போது இடது கையால் தடுக்க இடது கை மணிக்கட்டில் பட்டு காயமும், 3-வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் செந்தில் குமார் என்ற ஓடைக்குமாரின் இரண்டு கண் புருவத்தில் மாறி மாறி குத்தியதால் காயமும், 4-வது எதிரி கத்தியால் செந்தில்குமார் (எ) ஓடைக்குமாரின் வலது முன் காலில் மாறி மாறி வெட்டி காயம் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்துள்ளார்கள். மேற்படி குற்ற செய்கைக்காக 1, 2, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 307 IPC-ன் படியும், 5, 6, 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 341 கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் : | 1, 2, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 307 IPC-ன் படியும், 5, 6, 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 341 கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் வாதுரை : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு : | குற்றவாளிகள் இல்லை. |
| தீர்ப்பு : | அரசு தரப்பில் 1, 2, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 307 IPC-ன் படியும், 5, 6, 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 341 கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு |

குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No.25/2025–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.2 முதல் சா.பொ.5 வரையிலான சான்று பொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகின்றது. சா.பொ.6 வழக்கு சொத்துள்ள புகைப்படங்கள் 2 எண்ணிக்கை உள்ளதை வழக்கு கோப்பில் வைக்க உத்தரவிடப்படுகிறது.

சா.பொ.1 TN 57BJ 8062 Suzuki Sixer என்ற இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அதன் உரிமையாளரே வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகின்றது. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மற்றொரு வழக்கு சொத்தான காவல் நிலைய பொறுப்பில் உள்ள TN 59 AS 8327 Yamaha Crux என்ற இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகு நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பாக 27.03.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் திரு. M. விஜயேந்திரன், கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களும், 1வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. பரத் அவர்களும், 2, 3, 4, 6, 7 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. J. சவரிராஜ்

அவர்களும், 5வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.மனோஜ்குமார் அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதைக் கேட்ட பின்னர், இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக 27.03.2026–ம் தேதி அன்று விசாரணைக்கு வந்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–

இவ்வழக்கின் புகார்தாரர் பூங்கொடியும் அவரது கணவர் செந்தில் குமார் (எ) ஓடைக்குமாரும் திண்டுக்கல் மேட்டுப்பட்டி ராமர்பிள்ளை தோப்பில் வசித்து சாலையோரம் காய்கறி வியாபாரம் செய்து வருகிறார்கள். கடந்த 25.07.2022ம் தேதி மாலை சுமார் 4 ¼ மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரரின் கணவர் செந்தில் குமார் (எ) ஓடைக்குமார் ராமர்பிள்ளை தோப்பு அருகில் உள்ள அவரது வீட்டின் முன்பு இருந்த போது அவருக்குத் தெரிந்த ஆஜர் 1 முதல் 7 எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் ராமர்பிள்ளை தோப்பு வந்தவர்கள் புகார்தாரரின் வீட்டின் முன்பு உட்கார்ந்து இருந்த புகார்தாரரின் கணவர் செந்தில்குமார் @ ஓடைக்குமாரை பார்த்து மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி இறங்கி வந்து அவரிடம் அழகர் எங்கே என கேட்டுள்ளார்கள். புகார்தாரரின் கணவர் எதற்கு அழகரை என்னிடம் கேட்கிறீர்கள் என சொல்லியுள்ளார். அதற்கு எதிரிகள் எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பியுள்ளான். அவனை போட்டுத் தள்ள வேண்டும் என சொல்லியுள்ளார்கள். அதற்கு புகார்தாரரின் கணவர் எங்க ஏரியாவிலேயே வந்து எங்க ஆளை கேட்கிறீர்களா இந்த விபரத்தை அழகரிடம் சொல்கிறேன் பார் என்று சொல்லவே 1– வது எதிரி டே இவனை இழுத்து வாங்கடா என சொன்னவுடன், உடன் வந்த 5,6,7 எதிரிகள் புகார்தாரரின் கணவரை பிடித்து சிறிது தூரம் இழுத்து வந்துள்ளார்கள். 1–வது எதிரி கொலை செய்யும் நோக்குடன் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரின்

கணவர் செந்தில்குமார் என்ற ஓடைக்குமாரின் மூக்கில் வெட்டியும், அதே சமயம் 2வது எதிரி அருவாளால் தலையை நோக்கி வெட்டிய போது செந்தில் குமார் @ ஓடைக்குமார் வலது கையால் தடுக்கவே வலது கை மணிக்கட்டில் வெட்டு காயமும், பின் மீண்டும் தலையில் வெட்டிய போது இடது கையால் தடுக்க இடது கை மணிக்கட்டில் பட்டு காயமும், 3-வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் செந்தில் குமார் என்ற ஓடைக்குமாரின் இரண்டு கண் புருவத்தில் மாறி மாறி குத்தியதால் காயமும், 4-வது எதிரி கத்தியால் செந்தில்குமார் (எ) ஓடைக்குமாரின் வலது முன் காலில் மாறி மாறி வெட்டி காயம் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்துள்ளார்கள். மேற்படி குற்ற செய்கைக்காக 1, 2, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 307 IPC-ன் படியும், 5, 6, 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 341 கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பரிசீலனை செய்து, முடிவில் இவ்வழக்கானது திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3-ல் PRC 74/2022 ஆக 17.11.2022-ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கின் எதிரிகள்ன திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு இவ்வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றச் சாட்டுக்கள் என்பதால், முதல் நிலை பதிவு வழக்கினை திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 209(அ)ன் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கானது 01.02.2025–ம் தேதியன்று அமர்வு வழக்கு எண்.33/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரானபோது, இருதரப்பினைக் கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரிகள் இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றத்தினை புரிந்திருக்கக் கூடும் என்று அனுமானிக்க போதிய ஆதாரங்கள் இருந்ததால், 1, 2, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 307 IPC–ன் படியும், 5, 6, 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 341 கீழும் எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்தார்கள். எதிரிகள் குற்றத்தினை மறுத்த காரணத்தினால், இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருளாக சா.பொ.1 முதல் சா.பொ.6 வரையிலான சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :–</u>

I) இந்த வழக்கில் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 பூங்கொடி என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளையும், மற்ற எதிரிகளையும் தெரியாது என்றும், இந்த வழக்கில் காயம்பட்ட நபரான செந்தில்குமார் தனது கணவர் என்றும், சுமதர்

3 வருடங்களுக்கு முன்பாக தான் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது, தனது கணவருக்கு அடிபட்டு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னதை கேள்விப்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று தனது கணவரை பார்த்தபோது, அவருக்கு முகம் மற்றும் கண்ணில் அடிபட்டுஇருந்ததாகவும், போலீசார் விசாரித்து புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், தனது கணவரை யார் காயப்படுத்தியது என்று தனக்குத் தெரியாது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

ii) அ.சா.2 செந்தில்குமார் என்பவர் ஆஜர் எதிரிகளையும், மற்ற எதிரிகளையும் தெரியாது என்றும், சசுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக ராமபிள்ளைத் தோப்பில் குடிப்பதற்காக சென்றபோது, நான்கு, ஐந்து நபர்கள் வந்தார்கள் என்றும், தனது சட்டையை பிடித்து அடித்தும், கம்பி, கத்தியை வைத்து தாக்கினார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள் அவர்கள் தன்னை தாக்கியதற்கு பயன்படுத்திய ஆயுதங்கள் அல்ல என்றும், தன்னை யார் அடித்தார்கள் என்று தனக்குத் தெரியாது என்றும், தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலும், மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், "போலீசார் மதுரையில் நான் சிகிச்சையில் இருந்தபோது விசாரித்தார்கள். நான் மயக்கமாக இருந்ததால் யார் புகார் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது," என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். அ.சா.3 முத்துப்பாண்டி, அ.சா.4 பழனியம்மாள், அ.சா.5 ஆரோக்கியம்மாள் அ.சா.6 ஆகியோர்கள் இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளனர்.

iii) அ.சா.7 இளஞ்செழியன், துணைக் காவல் கண்காணிப்பாளர் தனது சாட்சியத்தில், கடந்த 25.07.2022ம் தேதி திண்டுக்கல் நகர் தெற்கு காவல்

நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, அன்றைய தினம் 18.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு. கணேசன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, மாலை 05.00 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பெற்று தகவலைப் பெற்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செந்தில்குமார் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால், அவருக்கு துணையாக இருந்த அவருடைய மனைவி பூங்கொடி என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 170/2022, சட்டப்பிரிவு 307 இ.த.ச. வின் படி அ.சா.ஆ. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு கோப்பை மேல் விசாரணை செய்வதற்காக தனது பார்வைக்கு வைத்தார் என்றும், அன்றைய தினமே 20.00 மணிக்கு தான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சம்பவ இடமான ராமர்பிள்ளைத்தோப்பு, பூங்கொடி வீட்டின் முன்பாக சென்று சாட்சிகள் முருகன் மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, சம்பவ இடத்தை விளக்கும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.6 பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், இவ்வழக்கு சாட்சிகளான பூங்கொடி, செந்தில்குமார், முத்துப்பாண்டி, சிவக்குமார், பழனியம்மாள், ஆரோக்கியம்மாள், முருகன் மற்றும் கண்ணன் ஆகியோர்களை தனித் தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தும், பின்னர் 27.07.2022ம் தேதி காலை 07.00 மணிக்கு தகவலின்பேரில் மேட்டுப்பட்டி, MGR நகர் தெற்கே உள்ள மாமூ தோட்டக்கிணறு பம்புசெட் அருகே இவ்வழக்கு எதிரிகளான மாதவன், விக்னு என்ற விக்னேஷ், கார்த்திகேயன், முகேஷ்குமார் மற்றும் பிரவீன்குமார் ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்தும், எதிரி மாதவன் என்பவரை விசாரித்தபோது, அவர் சாட்சிகள் முருகன் மற்றும் அகஸ்டின் அமல்ராஜ் ஆகியோர் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், துண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில், தானும், எதிரிகளும்

சேர்ந்து சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாள் மற்றும் கத்திகள் மற்றும் TN 57 BJ 8062 Suzuki இருசக்கர வானத்தையும், ஆயுதங்களை அருகில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்துள்ளதை, அன்றைய தினமே காலை 09.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் மேட்டுப்பட்டி, MGR நகருக்கு தெற்கே உள்ள மாமூ தோட்டக்கிணறு பம்புசெட் அருகே எதிரி மாதவன் எடுத்து ஆஜர் செய்த மற்றும் TN 57 BJ 8062 Suzuki இருசக்கர வானத்தையும், சுமார் 32 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 யையும் 41 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய அருவாள் – 1 யையும், 33 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 யையும், 30 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 யையும் அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், எதிரிகள் மாதவன், விக்னு என்ற விக்னேஷ், கார்த்திகேயன், முகேஷ்குமார் மற்றும் பிரவீன்குமார் ஆகியோர்களை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான முருகன் மற்றும் அகஸ்டின் அமல்ராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டும், பின்னர் 16.08.2022ம் தேதி இவ்வழக்கின் தலைமறைவு எதிரியான விஷ்வா என்பவரை குடைப்பாறைப்பட்டி காவல் சோதனை சாவடி அருகே காலை 05.30 மணிக்கு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, TN 59 AS 8327 பதிவு எண் கொண்ட யமஹா இருசக்கர வாகனத்தில் வந்தவரை காரணம் கூறி கைது செய்து, விசாரணை செய்தபோது, அவர் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலுமின்றி சாட்சிகள் வீரபாண்டி, ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், அன்றைய தினமே காலை 07.30 மணிக்கு அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஆஜர் செய்த TN 59 AS 8327 யமஹா இருசக்கர வாகனத்தை அ.சா.ஆ.10 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்

மகஜர் சாட்சிகளான வீரபாண்டி, ராஜ்குமார் ஆகியோரை விசாரித்து தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கின் மற்றொரு எதிரியான பரத் என்பவர் நீதிமன்ற முன்பிணையில் சென்றுவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

iv) மேற்படி வழக்கு சொத்துக்களை தனித்தனியே அ.சா.ஆ.11 படிவம் – 91ன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தாகவும், TN 57 BJ 8062 Suzuki இருசக்கர வாகனம், சா.பொ. 1 முதல் சா.பொ.6 வரையுள்ள சான்று பொருட்களான சுமார் 32 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1, 41 ½ செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய அருவாள் – 1, 33 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1, 30 செ.மீ. நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி – 1 ஆகியவற்றையும், TN 59 AS 8327 எமஹா இருசக்கர வாகனத்தின் புகைப்படங்களில் உள்ளவை எதிரிகளிடமிருந்து கைப்பற்றியவை தான் என்றும், மற்றும் TN 59 AS 8327 எமஹா இருசக்கர வாகனத்தின் இரண்டு எண்ணிக்கைகள் கொண்ட புகைப்படங்கள் ஆகியவற்றை கைப்பற்றியதாகவும், 02.112022ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்து, மருத்துவச் சான்று வழங்கிய அரசு மருத்துவர்கள் திரு. கணேஷ்குமார் மற்றும் திரு. வசந்த் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டதாகவும், திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய அ.சா.ஆ.13 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் மற்றும் மதுரை அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய அ.சா.ஆ.14 காயச்சான்றிதழ் பெற்றும் சார்பு ஆய்வாளர் திரு. கணேசன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டதாகவும், பின்னர் இவ்வழக்கு விசாரணையில் குற்ற சம்பவத்தின் 5–க்கும் மேற்படி நபர்கள் ஆயுதங்களுடன் குற்ற செய்கையில் ஈடுபட்டு இருந்ததால், வழக்கு சட்டப்பிரிவுகளை 307, 147, 148, 341 இ.த.ச.வாக பிரிவுகள் மாறுதல் செய்து அ.சா.ஆ.15 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்

செய்தும், பின்னர் தனது புலன் விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கு எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 307, 147, 148, 341 இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், அ.சா.7 சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிகளுக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளை குறித்து எதிரிகளிடம் பிரிவு 351 BNSS–ன் கீழ் விசாரணை செய்தபோது, எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால், விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச் சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

## <u>தீர்வு:–</u>

8. அரசுதரப்பு வழக்கில், இவ்வழக்கின் புகார்தாரர் பூங்கொடியும் அவரது கணவர் செந்தில் குமார் (எ) ஓடைக்குமாரும் திண்டுக்கல் மேட்டுப்பட்டி ராமர்பிள்ளை தோப்பில் வசித்து சாலையோரம் காய்கறி வியாபாரம் செய்து வருகிறார்கள் என்றும், கடந்த 25.07.2022ம் தேதி மாலை சுமார் 4 ¼ மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்ட புகார்தாரரின் கணவர் ராமர்பிள்ளை தோப்பு அருகில் உள்ள அவரது வீட்டின் முன்பு இருந்த போது அவருக்குத் தெரிந்த ஆஜர் 1 முதல் 7 எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் ராமர்பிள்ளை தோப்பு வந்தவர்கள் புகார்தாரரின் வீட்டின் முன்பு உட்கார்ந்து இருந்த புகார்தாரரின் கணவரைப் பார்த்து மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி இறங்கி வந்து அவரிடம்

அழகர் எங்கே என கேட்டுள்ளார்கள் என்றும், புகார்தாரரின் கணவர் எதற்கு அழகரை என்னிடம் கேட்கிறீர்கள் என கேட்டதற்கு எதிரிகள் எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பியுள்ளான். அவனை போட்டுத் தள்ள வேண்டும் என சொல்லியுள்ளார்கள். அதற்கு புகார்தாரரின் கணவர் எங்க ஏரியாவிலேயே வந்து எங்க ஆளை கேட்கிறீர்களா இந்த விபரத்தை அழகரிடம் சொல்கிறேன் பார் என்று சொல்லவே 1- வது எதிரி டே இவனை இழுத்து வாங்கடா என சொன்னவுடன், உடன் வந்த 5,6,7 எதிரிகள் புகார்தாரரின் கணவரை பிடித்து சிறிது தூரம் இழுத்து வந்துள்ளார்கள். 1-வது கொலை செய்யும் நோக்குடன் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரின் கணவர் செந்தில்குமார் என்ற ஓடைக்குமாரின் மூக்கில் வெட்டியும், அதே சமயம் 2வது எதிரி அருவாளால் தலையை நோக்கி வெட்டிய போது செந்தில் குமார் @ ஓடைக்குமார் வலது கையால் தடுக்கவே வலது கை மணிக்கட்டில் வெட்டு காயமும், பின் மீண்டும் தலையில் வெட்டிய போது இடது கையால் தடுக்க இடது கை மணிக்கட்டில் பட்டு காயமும், 3-வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் செந்தில் குமார் என்ற ஓடைக்குமாரின் இரண்டு கண் புருவத்தில் மாறி மாறி குத்தியதால் காயமும், 4-வது எதிரி கத்தியால் செந்தில்குமார் (எ) ஓடைக்குமாரின் வலது முன் காலில் மாறி மாறி வெட்டி காயம் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்துள்ளார்கள் என்று இந்த வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் திண்டுக்கல் தெற்கு காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

9. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருளாக சா.பொ.1 முதல் சா.பொ.6 வரையிலான சான்று பொருட்களும் குறியீடு

செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

10. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்று பரிசீலிக்கையில், இந்த வழக்கில் காயம்பட்ட நபரான அ.சா.2 சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் குறித்தும் கூறும் சாட்சியாகவும், அ.சா.1 காயம்பட்ட அ.சா.2ன் மனைவி மற்றும் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்து புகார் வாக்கு மூலம் கொடுத்தது பற்றி கூறும் சாட்சியாகவும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அ.சா.3 மற்றும் அ.சா.6 ஆகியோரும், அ.சா.4, 5 ஆகியோர் சம்பவத்தை கேள்விப்பட்டது குறித்தும், அ.சா.7 காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளிப்பவராகவும், மேற்படி சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிப்பவர்களாக மேற்படி சாட்சிகள் சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

11. இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நபரான அ.சா.2, மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.6 ஆகியோர் மிக முக்கியமான சாட்சிகளாவாகள். மேற்படி அ.சா.2-ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும், இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது என்றும், குடிப்பதற்காக சென்றபோது, நான்கு ஐந்து நபர்கள் வந்தார்கள் என்றும், தனது சட்டையை பிடித்து அடித்ததாகவும், கம்பு, கத்தியை வைத்து தாக்கினார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள் அவர்கள் தன்னை தாக்கியதற்கு பயன்படுத்திய ஆயுதங்கள் அல்ல என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். அவரை அரசு

தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதும், அவர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதையும் அளிக்கவில்லை.

12. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக காட்டப்பட்டுள்ள அ.சா.3ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும், இந்த வழக்கின் மற்ற எதிரிகளைத் தெரியாது என்றும், இந்த வழக்கில் காயம்பட்ட செந்தில்குமார் தனது அண்ணன் என்றும், 2022ம் ஆண்டு தனது அண்ணன் அடிபட்டு மருத்துவமனையில் இருப்பதாக கேள்விப்பட்டு போனதாகவும் சாட்சியமளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.6ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும், இந்த வழக்கின் மற்ற எதிரிகளை தெரியாது என்றும், அ.சா.2 செந்தில்குமாரை தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். மேற்படி மூவரும் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுள்ளதால், அவர்களது சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர் அரசுதரப்பில் பிறழ் சாட்சிகளாக மாறி இருக்கிறார்கள். அ.சா.7–ஐ பொறுத்த வரையில், இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரிகள் மீது முகாந்திர வழக்கு உள்ளது என்பதால், அவர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

13. மேலே விவாதிக்கப்பட்டபடி அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்கும் அளவிற்கு காயம்பட்ட நபரான அ.சா.2, நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 மற்றும் அ.சா.3 முதல் 6 வரையுள்ள சாட்சிகளும் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களைப் பொறுத்து, அதை அவர்கள் தான் செய்தார்களா என்பதை புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து முடிவு

செய்துவிடலாகாது. அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தகுந்த மற்றும் நீதிமன்றம் ஏற்கும் படியான சாட்சியங்கள் மற்றும் சான்று ஆவணங்களை முன்னிலைப்படுத்தி, நியாயமான சந்தேகங்களுங்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.7 புலன் விசாரணை அதிகாரி அவர் தனது அரசு பணியைச் செய்யும் போது, சொல்லப்பட்ட ஒன்றாகவே கருத இயலும். எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி தீர்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. இறுதியாக மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்றபோது, அரசு தரப்பில் 1, 2, 3, 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 307 IPC–ன் படியும், 5, 6, 7 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 341–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

15. இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No.25/2025–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.2 முதல் சா.பொ.5 வரையிலான சான்று பொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகின்றது. சா.பொ.6 வழக்கு சொத்துள்ள புகைப்படங்கள் 2 எண்ணிக்கை உள்ளதை வழக்கு கோப்பில் வைக்க உத்தரவிடப்படுகிறது.

16. சா.பொ.1 TN 57 BJ 8062 Suzuki Sixer என்ற இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் இடைக்காலமாக பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அதன் உரிமையாளரே வைத்துக் கொள்ளவும், பிணைமுறி ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகின்றது. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டு திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய பொறுப்பில் உள்ள TN 59 AS 8327 Yamaha Crux என்ற இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகு நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் மார்ச் மாதம் 27–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V DEEPA
Ex. P8
Digitally signed by V DEEPA
Date: 2026.03.30 21:07:25 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.

**அரசுத் தரப்புச் சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. பூங்கொடி |
| அ.சா.2 | திரு. செந்தில்குமார் |
| அ.சா.3 | திரு. முத்துப்பாண்டி |
| அ.சா.4 | திருமதி. பழனியம்மாள் |
| அ.சா.5 | திரு. திருமதி. ஆரோக்கியம்மாள் |
| அ.சா.6 | திரு. சிவக்குமார் |
| அ.சா.7 | திரு.இளஞ்செழியன், துணைக் காவல் கண்காணிப்பாளர் |

**அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.07.2022 | தேதியிட்ட புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும். |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | 25.07.2022 | தேதியிட்ட புகார் மனுவிலுள்ள அ.சா.2ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.3 | 25.07.2022 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 25.07.2022 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 25.07.2022 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 25.07.2022 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 27.07.2022 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். |
| அ.சா.ஆ.8 | 27.07.2022 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.9 | 27.07.2022 | தேதியிட்ட 5வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிதக்கப்பட்ட பகுதி மட்டும். |
| அ.சா.ஆ.10 | 16.08.2022 | தேதியிட்ட அத்தாட்சி |
| அ.சா.ஆ.11 | 27.07.2022 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.12 | 16.08.2022 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.13 | 25.07.2022 | தேதியிட்ட திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.14 | – | மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வழங்கிய உள்நோயாளி சீட்டு நகல். |
| அ.சா.ஆ.15 | 02.11.2022 | தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசுதரப்பு சான்று பொருள் :**

| | |
|---|---|
| சா.பொ.1 | TN 57 BJ 8062 Suzuki Sixer |
| சா.பொ.2 | சுமார் 32 ½ செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்று |
| சா.பொ.3 | சுமார் 41 ½ செ.மீ நீளமுள்ள அருவாள் ஒன்று |
| சா.பொ.4 | சுமார் 33 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்று |
| சா.பொ.5 | சுமார் 30 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்று |
| சா.பொ.6 | TN 59 AS 8327 Yamaha Crux |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும், சான்றாவணம் :</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள் :</u>** இல்லை

**<u>குறிப்பு:–</u>**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. சொத்து பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

V DEEPA

Ex. P8
Digitally signed by V DEEPA
Date: 2026.03.30 21:07:43 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.